சார்பு நீதிமன்றம் அரூர், தருமபுரி மாவட்டம்

முன்னிலை : - **திரு.R.விஜயன்,M.A.,B.L.,**

சார்பு நீதிபதி, அரூர்

2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இ.நி.ம.எண்.01/2025**

**இன்**

**அசல் வழக்கு எண்.173/2021**

1. கிருஷ்ணன்

2. ராஜி

3. அமிர்தம் .... மனுதாரர்கள் / வாதிகள்

**// எதிராக //**

1. சக்திவேல்

2. திருப்பதி

3. கிராம நிர்வாக அலவலர், சிக்களூர்

4. வட்டாட்சியர், அரூர்

5. சார்பதிவாளர், அரூர்

6. மாவட்ட ஆட்சியர், தருமபுரி

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, என் முன்பாக 02.12.2025 ம் தேதியன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜி.இராதாகிருஷ்ணன்,எம்.காம்.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகியும், 1,2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.சி.சக்திவேல்,பி.ஏ.,பி.எல் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும், இருதரப்பு வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலினை செய்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

1. மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் இன்று தாக்கல் செய்யும் கூடுதல்



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.05 17:11:42 +0530

ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14-ன் கீழ் மனுதாரர்/வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2. <u>மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்த மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம்:-</u>**

(i) தான் மேற்படி நஷ்டஈட்டு மனுவில் 1-ம் மனுதாரர் தாவாவில் 1-ம் வாதி ஆவேன் என்றும், 2,3 மனுதாரர்கள் வாதிகளுக்கும் இதே அபிடவிட் போதுமானது என்றும், மேற்படி அசல் வழக்கு தங்கள் தரப்பில் விசாரணைக்காக வேண்டி வாய்தாவில் உள்ளது என்றும், தாவா சொத்துக்கள் தங்களின் சுவாதீன அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதை நிரூபிக்கும் வகையில் தங்கள் தாயார் மாரியம்மாள் என்பவர் பெயரில் உள்ள அடங்கல் ஆவணத்தை தங்கள் தரப்பு ஆவணங்களாக கனம் நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டி உள்ளது என்றும், ஆகையால் கனம் கோர்ட்டாரவர்கள் தயவு கூர்ந்து இன்று ஒப்படைக்கும் ஆவணத்தை தங்கள் தரப்பு கூடுதல் ஆவணங்களாக குறியீடு செய்ய ஏதுவாக தக்க அனுமதி அளித்து உத்திரவு பிறப்பிக்க வேண்டியது மிகவும் அவசியமாயும், நியாயமாயும் இருக்கிறது. இல்லாவிடில் தங்களுக்கு பெருத்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்பட்டுவிடும் என்று மனுதாரர்/வாதி தனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

**3. <u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-</u>**

(i) மனுதாரர் மனு பொய் மோசடியானது சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்ய வேண்டியது ஆகும். மனு அபிடவிட் பாரா 2-ல் கண்ட சங்கதிகள் தவறானது. தாவா சொத்துக்கள் வாதிகளின் சுவாதீன அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதை நிரூபிக்கும் வகையில் வாதிகள் தாயார் மாரியம்மாள் என்பவர் பெயரில் உள்ள அடங்கல் ஆவணத்தை வாதிகள் தரப்பு ஆவணங்களாக கனம்



R VIJAYAN Digitally signed by R VIJAYAN Date: 2025.12.05 17:11:45 +0530

நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டி உள்ளது என்பது சற்றும் சரியல்ல.

(ii) தாவாவில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வீண் காலதாமதம் செய்யும் நோக்கத்தில் இதுபோன்ற மனுக்கள் வேண்டுமென்றே தொடரப்பட்டுள்ளது. மனுவில் சரியான காரணங்கள் கூறி தொடரப்படாததால் மனு நிலைக்கத்தக்கதல்ல. ஆகவே கனம் கோர்ட்டார் அவர்கள் மனுதாரரின் இந்த பொய்யான மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு செய்ய வேண்டும் என்று 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தனது எதிருரையில் கூறியுள்ளார்.

4. 3 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாத காரணத்தினால் தோன்றாத்தரப்பினர்களாக பாவிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது.

**5. இம்மனுவில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

**<u>தீர்வு</u>** : -

6. மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் இன்று தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 7 விதி 14-ன் கீழ் மனுதாரர்/வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

7. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கானது மனுதாரர்கள்/வாதிகள் விசாரணைக்காக இருந்தபோது தாவா சொத்துக்கள் தங்களின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை காட்ட தங்களது தாயார் மாரியம்மாள் என்பவர் பெயரில் உள்ள அடங்கள் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாவா



R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.05 17:11:47 +0530

சொத்துக்கள் வாதிகளின் சுவாதீன அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்பதை நிரூபிக்கும் வகையில் மனுதாரர்/வாதிகளின் தாயார் மாரியம்மாள் என்பவரின் பெயரில் உள்ள அடங்கல் ஆவணங்களை வாதி தரப்பு ஆவணங்களாக நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டி இருப்பது சரியல்ல என்றும், வீண் காலதாமதம் செய்வதற்காக தான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள அடங்கல் கணக்குகள் அசல் வழக்கில் தொடர்புடையதா? இல்லையா? என்பதை குறித்து அவை குறியீடு செய்யப்பட்டு பின் வாதத்திற்கு பிறகே முடிவு செய்ய முடியும். தற்போதைய நிலையில் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்களை குறியீடு செய்வதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக,** மனுதாரர்/வாதி தரப்பில் இம்மனுவில் இன்று தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தக்க உத்தரவு பிறப்பித்து இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் உடனுக்குடன் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05 ம் நாளான இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.05 17:11:51 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.

<u>**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u> : -

--- இல்லை ---

R VIJAYAN
Digitally signed by R VIJAYAN
Date: 2025.12.05 17:11:54 +0530

சார்பு நீதிபதி,

அரூர்.